Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 26 ஹிஜ்ரி 1428 துல்கதா 08 (11.12.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ் 72



## பிரபாவைச் சந்திப்பதற்கு ரவூப் ஹக்கீம் தீர்மானம்!

கொழும்பு —

கிழக்கில் நடைபெற்று வரும் படுகொலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இந்தச் சந்திப்பிற்கு முன்னதாக கிழக்கில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும், அவர்களுக்கு இன்னல்கள் ஏற்படுத்துவது நிறுத்தப்படவேண்டும் என்றும், விடுதலைப் புலிகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தற்போதைய நிலை தொடர்பில் பேச்சு (8 ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபம் உடப்பில் தேடுதல்; 24 தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு —

சிலாபம் உடப்பு பிரதேசத்தில் கடந்த வியாழன் இரவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 24 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் விடுதலைப்புலிகள் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலொன்றுக்கமைய திடீர் தேடுதல்களை மேற்கொண்டதாக சிலாபம் பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் பெரேரா (8 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி பேச்சுவார்த்தை அடுத்த மாதம் ஆரம்பம்!

கொழும்பு —

புதிய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்படவுள்ள சர்வகட்சி பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் ஜனவரிமாதம் இரண்டாம் வாரத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

சர்வகட்சி மாநாட்டிற்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளுடன் தனித்தனியே முதல் சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளார். ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய உட்பட பல கட்சிகளுடன் ஜனாதிபதி இது தொடர்பான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய (8 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பது அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது!

## எச்சரிக்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி —

தமிழ் மக்களின் அபிலாஷைகள், நிறைவேற்றப் படாதவிடத்து - தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி போராட்டத்தைத் தொடர்வர் எனவும், மீண்டுமொரு யுத்தம் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான கடைசிச் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கமே உள்ளதென தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச செய்திநிறுவனமான ரொய்ட்டருக்கு நேற்று முன்தினம் வழங்கிய பேட்டியின்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்படிக்கையை திருத்துவதற்கு அரசு தீர்மானம்!

### கூட்டுப்படை தளபதி தெரிவிப்பு

கொழும்பு —

போர்நிறுத்த உடன்படிக்கையில் படையினருக்குப் பாதகமாக இருக்கும் நிபந்தனைகளைத் திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

போர்நிறுத்த உடன்படிக்கையில் படையினருக்குப் பாதகமாக இருக்கும் நிபந்தனைகள் குறித்த யோசனைகளை முப்படைகளின் தளபதிகள் ஏற்கனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

அந்தத் திருத்தங்கள் குறித்து தற்போது வெளியிடமுடியாது. போர் நிறுத்த உடன்படிக்கை திருத்தங்கள் குறித்து ஜனாதிபதியுடன் தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலை ஈ.பி.டி.பி அலுவலகத்தில் குண்டு வெடித்து நால்வர் காயம்!

## இரு தமிழர்கள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —


### அன்பான வாசக நேயர்களுக்கு...

தவிர்க்கவே முடியாத இயற்கைச் சூழலின் தாக்கம் காரணமாக இன்றைய நமது ஈழநாடு எட்டுப் பக்கங்களுடன் வெளியாகியுள்ளது இன்று வரவேண்டிய விளையாட்டரங்கு பகுதி நாளை வழமையான பக்கங்களுடன் இணைக்கப்பட்டு வெளிவரும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.

## குண்டு வெடித்து நால்வர் காயம்!

திருகோணமலை

திருகோணமலை துறைமுகத்திற்கு முன்பாகவுள்ள உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஈ.பி.டி.பியின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் உட்பட நால்வர் காயமடைந்தனர். (8 ஆம் பக்கம் பார்க்க)



## சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி கிரானில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இளம் குடும்பஸ்தர்கள் இருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

இவர்களின் வீடுகளுக்குச் சென்ற இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள்- இவர்களை வெளியே அழைத்து துப்பாக்கியால் சுட்டு (8 ஆம் பக்கம் பார்க்க)

இன்று வரவேண்டிய விளையாட்டரங்கு பகுதி நாளை வழமையான பக்கங்களுடன் இணைக்கப்பட்டு வெளிவரும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்

நன்றி

- ஆசிரிய பீடம்

# சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசு புதிய யோசனை தயாரிப்பு!

கொழும்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம்- சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக புதிய யோசனைகளைத் தயாரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூஷி அகாஷி நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்பு செய்தியாளர்களிடம் இதுபற் றிய தகவலை வெளியிட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பனூஸ் புயல்காற்று, அடைமழை; குடாநாட்டில் இயல்புநிலை பாதிப்பு



யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டை நேற்றுத் தாக்கிய பனூஸ் புயல்காற்றினாலும், மழை மற்றும் வெள்ளப் பெருக்கினாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்புக்குள்ளானதுடன், பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலை மற்றும் பொது இடங்களில் தங்கியுள்ளன.

நேற்றைய புயல்காற்றால் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாரிய மரங்கள் முறிந்து வீதிகளுக்குக் குறுக்கே விழுந்ததால் போக்குவரத்துகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. அத்துடன் நேற்றுப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், மக்களின் குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்தது. இதனால் அவர்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.


குறிப்பாக யாழ்.பிரதேச (8 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச மனித உரிமைகள் தினம் கிளிநொச்சியில் நேற்று அனுஷ்டிப்பு!

கிளிநொச்சி

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று கிளிநொச்சியில் சிறப்புற அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவர் அருட்திரு எஸ்.கருணாரட்னம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. (8 ஆம் பக்கம் பார்க்க)



APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1. ஓ.பி.டி [O.P.D] 2. ஆய்வுகூடம் 4. கிளினிக் 5. பார்மசி 5. உடற்பயிற்சி [நோயாளிகளுக்கு]

தொலைபேசி: 021-222 8144

173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(C/4385)

ஆலோசனை நேரம்:


(திங்கள் - சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை

ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை


மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை



## யாழ்.குடாநாட்டில் நேற்று வீசிய பனூஸ் புயற்காற்றால் ஏற்பட்ட பாதிப்புகளின் சில பதிவுகள்...










# எழுதுவினைஞர் பதவிக்கான வகுப்புகள் மீண்டும் ஆரம்பம்

மானிப்பாய் —

அரச அலுவலக சேவையில் உள்ளவர்களை எழுதுநர்களாகத் தரம் உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சைக்குத் தயார் செய்வதற்கான பயிற்சி வகுப்பு திருநெல்வேலியில் நடைபெற்றுவந்தது.

இருந்தும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வகுப்புகள் யாவும் வழமைபோல சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுமென மேற்படி வகுப்பை ஒழுங்கு செய்த அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ.சந்திரகுமார் தெரிவித்தார்.

எனவே, விரைவில் நடைபெறவிருக்கும் இந்தப் பரீட்சைக்குத் தம்மைத் தயார்படுத்தும் அரச ஊழியர்களை இந்தப் பயிற்சி வகுப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

(100)

## நத்தார் இன்னிசை ஆராதனை

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் நத்தார் இன்னிசை ஆராதனை இன்று மாலை 4 மணிக்கு திருநெல்வேலி வளாக வீதியிலுள்ள பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (100)

## மருத்துவ முகாமும் விழிப்புணர்வு கருத்தூட்டலும்

பூநகரி —

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் சுகாதாரப் பிரிவினரும், பற்சுகாதாரப் பிரிவினரும் இணைந்து கடந்த புதன்கிழமை பூநகரி - கரியாலை, நாகபடுவான் மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் கரியாலை நாகபடுவான், குமிழமுனை கிராமமக்களை உள்ளடக்கி பற்சிகிச்சை, பொதுமருத்துவ சிகிச்சையும், வாய்ப்புற்றுநோய், உயர் குருதி அமுக்கம், சலரோகம் போன்ற நோய்களை இனங்காணுதல் நடைபெற்றது.

அத்துடன் பல் தொற்றுநோய் தொடர்பான கண்காட்சியும் விழிப்புணர்வுக் கருத்தூட்டலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மருத்துவ முகாமில் சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் —

தொடரும் சீரற்ற காலநிலையின் காரணமாக இன்று (11.12.2005) 8.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (18.12.2005) முற்பகல் 8.30 மணிக்கு அதே மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருவதுடன், இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம்வருந்துவதாக கருத்தரங்கின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## நிர்வாகசபை கூட்டம்

யாழ்ப்பாணம் —

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் நிர்வாகசபைக் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நிறுவகத்தின் தலைவர் செல்வி ஸ்ரீ அருளானந்தம் தலைமையில் யாழ்.பொதுசன நூலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி நிறுவகத்தின் உறுப்பினர்களைத் தவறாது சமுகமளித்து ஆலோசனைகள் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 4 ஆம் திகதி நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (100)

# மன்னாரில் கடல்நீர் ஊருக்குள் உட்புகுந்தது

மன்னார் —

மன்னாரில் கடல்நீர் ஊருக்குள் உட்புகுந்துள்ளதால் 2 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரின் கண்டல் மற்றும் சேவரி ஆகிய கிராமங்களில் கடல் நீர் உட்புகுந்துள்ளதால் அங்கிருந்த மக்கள் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு கிராமங்களிலும் இருக்கும் 240 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களின் கிணறுகளில் கடல் நீர் கலந்துள்ளதால் இவ்விரு கிராம மக்களும் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
பம்பரக்கண்ணாலே
காட்சிகள்:-10.30,2.30, 6.30 (பு.நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
9 ஆம் திகதி முதல் காலை 10.30 காட்சியாக
சிவகாசி DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
இந்தியா இலங்கை ஒரே தின வெளியீடாக
மதியம் 1.30, 4.30, 7.30, 10.30 காட்சியாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
ஆறு

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையில் ஒரே தின வெளியீடு
ஷாம், சினேகா, அபர்ணா நடித்த
ABCD
காட்சிகள்;-10.30, 1.30, 4.30, இரவு 7.30 (புதிய நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
அக்ஷன் கிங்அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த
ஆணை
தற்காலிக புதியநேர மாற்றம்
காட்சிகள்:- காலை 10.30,1.30,4.30, 7.30 (பு.நே)

மணப்பெண் அலங்கார வகுப்பு
வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்கார Facials Wedding Structures, Rich Cakes, B' days Cake, தையல் Flower Decorations என்பவற்றுக்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புக்கள் சான்றிதழ்களுடன் நடைபெறுகின்றன. T.Luxmy, 18 B Station Road, Wellawatta. Tel : 2505325. (2122)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம் அசின் நடித்த
மஜா
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 01.07.1949

ஆண்டவன் அடியில் 11.11.2005

அமரர்

### திரு.ஞானப்பிரகாசம் பிலேந்திரராஜா ஜெயராஜா (பொன்ராசா)

கைப்பிடித்த நாள் முதலாய்க் கணமேனும் பிரியாமல்
நிழல்போல வந்தவளை நிர்க்கதியாய்த் தவிக்கவிட்டு
தோள் கொடுத்து வாழ்வினிலே சோராது நின்றவளின்
தோள் மீது தலை சாய்த்துத் தொலைதூரம் போனீரே.

கடைசிவரை என்னோடு இணைந்திருப்பீர் என்றிருக்க
இடைநடுவில் தவிக்கவிட்டு ஏனையா மறைந்தீர்கள்
நிழற்படமாய் என்னுள்ளே நிறைந்து நிற்கும் அன்புருவே
நீங்காது உம் நினைவு என்றென்றும் என்நெஞ்சில்.

அன்னாரின் மரணச்செய்திகேட்டு நேரிலும், தொலைபேசிமூலமும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் விநியோகித்தும், பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தும், எமது துயரினைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்திய நாமகள் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் செய்திகேட்டப் பதறி வந்த யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்வதுடன், 11.12.2005 இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

என்றும் நீங்கா நினைவுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி
திருமதி ச.பி.ஜெயராஜா சந்திரகாந்தி.

(2133)

## தவறிவிட்டது

அம்பன் குடத்தனையைச் சேர்ந்த மயிலு பொன்னையா சகுந்தலா என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.718124042V) கடந்த 07.12.2005 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் **இந்திரா பல்பொருள் வாணிபம், வங்களாவடி, வேலணையில்** ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணவேணி பத்மநாதன்

(கடைச்சாமி கோயிலடி, நீராவியடி, யாழ்ப்பாணம்)

கடைச்சாமி கோயிலடி, நீராவியடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணவேணி பத்மநாதன் அவர்கள் கடந்த வியாழக்கிழமை (08.12.2005) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சரவணமுத்து சரஸ்வதி தேவி தம்பதிகளின் அன்பு மகளும் பத்மநாதன் அவர்களின் பாசத்திற்குரிய மனைவியும், பபிலான், அபிதாயினி,அபிராமி, சரவணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ஆனந்தராசா குடும்பத்தினர்

# மாணவர்மீது ஆயுதபலத்தைப் பிரயோகிப்பது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும்!

## வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கிறது

யாழ்ப்பாணம்

உரிமைக்காகப் போராடும் மாணவர்களை அடக்கும் வகையில், இராணுவத்தினர் ஆயுத பலத்தைப் பிரயோகிப்பதை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இந்த நிலை தொடர்ந்தால், பாரிய பின்விளைவுகள் ஏற்படுமென எச்சரிப்பதாகவும், வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துப் படையினர் பாரிய மண் அணையை அமைத்து வருவதை எதிர்த்தும்- கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் மற்றும் ஹாட்லிக் கல்லூரி பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் இராணுவப் புலனாய்வுத் துறையினர் மற்றும் தமிழ்த்தேச விரோதக் கும்பலான ஈ.பி.டி.பி ஆகியோரால் கடத்தப்பட்டு, காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டு, அவர்களது உடமைகள் பறிக்கப்பட்டதைக் கண்டித்தும்- எமது வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் ஹாட்லிக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் இராணுவ முன்னரங்க காவலரண் முன்பாகக் கடந்த திங்கட்கிழமை அன்று மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்து அமைதியாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த பெருமளவான மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர் போராட்டம் நீடித்ததை அடுத்து அதனைக் குழப்பும் வகையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து 50 இற்கும் மேற்பட்ட கண்ணீர் புகைக்குண்டுகளையும், கற்களையும் மாணவர்கள் மீது வீசி மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்தினார்கள்.

இந்தச் சம்பவத்தில் மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டார்கள். செய்தி சேகரிக்க வந்திருந்த ஊடகவியலாளர்களில் ஒருவர் கண்ணீர்ப் புகைக்குண்டு பட்டதில் கையில் காயமடைந்தார். எமது அமைதிவழிப் போராட்டத்தில் வந்து பங்குபற்றிய யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவரும், அவருடன் வந்திருந்த மாணவர் பிரதிநிதி ஒருவரும், எமது வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் உறுப்பினர்களும், தற்போது வடமராட்சி மாணவர் அமைப்பு பிரதிநிதிகளாக உள்ள இரு மாணவர்களும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அந்த மாணவர் இருவரும் இராணுவப் புலனாய்வுத்துறையினரால் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். இவர்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள், பொங்கு தமிழ், மாவீரர் நாள் போன்ற பல்வேறு தமிழீழ எழுச்சி நிகழ்வுகளில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் மிலேச்சத்தமான செயல்கள் மாணவர்களை ஆத்திரமூட்டுவதோடு, எதிர்காலத்தில் மாணவர்களுடைய பாதுகாப்புக்கும் கேள்விக்குறியாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் "பாடசாலைகளை ஆக்கிரமித்திருக்கும்- அண்மையில் இருக்கும் இராணுவமுகாம்கள், காவலரண்கள் அகற்றப்பட்டு அச்சுறுத்தல் எவையுமற்ற சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு சிங்கள அரசும், இராணுவமும் வழிவிடல் வேண்டும்" என்ற கோரிக்கையுடன் யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கும் போராட்டம் வடமராட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. வடமராட்சி பிரதேசமெங்கும் கல்விச் செயற்பாடுகள் அனைத்தையும் புறக்கணித்த மாணவர்கள் தங்களது நீதியான கோரிக்கைக்கான நியாயமான பதிலை அன்று மாலைக்கிடையில் இராணுவத்தினர் தரவேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஹாட்லிக் கல்லூரி வளாகத்துக்குள் அமைந்திருக்கும் இராணுவமுகாம் அதிகாரியுடனும், யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவருடனும்-மாணவர் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் பலனெதுவும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில் வடமராட்சி பிரதேசப் பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன், தடியடிப் பிரயோகமும்' மேற்கொண்டனர்.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடுக்கப்பட்டு வடமராட்சியில் இடம்பெற்ற போராட்டத்துக்கு அரசதரப்பும், இராணுவத் தரப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வரை பதிலெதுவும் தராத நிலையில், மாணவர்களின் புறக்கணிப்புப் போராட்டம் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண குடாநாடெங்கும் விஸ்தரிக்கப்பட்டது.

யாழ்.நகரில் கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்து அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய எம் மாணவ சகோதரர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், அவர்களைக் கடுமையாகத் தாக்கியும் உள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகாம் அதிகாரியுடனும், யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளுடனும்- மாணவர் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில் சீற்றம் கொண்ட வடமராட்சி மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை ஹாட்லிக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகாம் அதிகாரியின் கொடும்பாவியை, இராணுவ முன்னரங்ககாவலரண் முன்பாக வைத்து எரித்தனர்.

எமது போராட்டத்திற்கு ஆதரவு தந்து யாழ்.கலட்டிச் சந்தியிலும், பரமேஸ்வராச் சந்தியிலும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் மீதும் மற்றும் பாடசாலை மாணவர்கள்மீதும் இராணுவத்தினர் கண்ணீர்புகைக்குண்டுகளையும், கற்களையும் வீசியதுடன், தடியடிப்பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளார்கள்.

உரிமைக்காகப் போராடும் மாணவர்கள் மீது அவர்களை அடக்கும் வகையில் இராணுவத்தினர் தமது ஆயுத பலத்தை பிரயோகிப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, பாரிய பின்விளைவுகள் ஏற்படுமெனவும் எச்சரிக்கிறோம்.

சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு வழிவிடுமாறு யாழ்.குடாநாட்டு மாணவர்களால் இராணுவத்தினருக்கு எதிராக நடத்திவரும் புறக்கணிப்பு போராட்டமும், மறியல் போராட்டமும் க.பொ.த (சா/த) பரீட்சையைக் கருத்தில் கொண்டு நேற்று முன்தினம் மாலையுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றது.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் யாழ்.குடாநாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட மாணவர்களின் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு நேற்றுமுன்தினம் மாலைவரை சிங்கள அரசும், இராணுவமும் பதில் தராநிலையில் க.பொ. த (சா/த) பரீட்சை முடிந்தவுடன் குடாநாடெங்கும் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்களை மாணவர்களாகிய நாங்கள் முன்னெடுத்து எம்மீதான ஆக்கிரமிப்பை உடைத்தெறிய உறுதிகொண்டுள்ளோம்.

**சிங்கள அரசே!**

எம் கல்விக்கூடங்களை ஆக்கிரமித்திருக்கும்- அண்மையிலிருக்கும் இராணுவமுகாம்கள், காவலரண்களை உடனே அகற்று; இராணுவமே எமது கல்விக்கு இடையூறாக இராதே; தமிழ் தேசவிரோத குழுவான ஈ.பி.டி.பியும், இராணுவமும் கூட்டாக கல்விக்கு குழிபறிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்து; போரின் வலியை உணர்ந்தவர்கள் நாங்கள்; எம்முடனா மீண்டும் நிழல் யுத்தம்?; இராணுவமே! எமது போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து செயற்படு! இன்றே நாம் வெடிகுண்டாக மாறும் நிலை ஏற்படும்! எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# இளைஞர் ஒன்றியத்தின் கிறிஸ்மஸ் நிகழ்வுகள்!

கொக்குவில்

பரிசுத்த உத்தரிய அன்னை ஆலய இளைஞர் ஒன்றியம் வருடா வருடம் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு நடத்தி வரும் நத்தார் நிகழ்வுகள் - இம்முறை இயக்குநர் அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களின் நெறிப்படுத்தலில் நடத்தப்படவுள்ளது.

நேற்று மாலை நத்தார் நிகழ்வுகளுடன் ஆரம்பமான நிகழ்ச்சிகள் தொடர்ந்து தினமும் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறஇருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியம், தனி நடிப்பு போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடைபெறும். இளைஞர்கள் திருமணமானவர்களுக்கான விசேட போட்டிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இறுதிநாள் சிறப்பு நிகழ்ச்சிகள் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு குருநகர் பரிசுத்த கார்மேல் அன்னை ஆலயமண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பமாகும். மேற்படி கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (206)

# பங்ஷால் வீதி புனரமைப்பு

கொக்குவில்

யாழ்.பங்ஷால் வீதி புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த வீதி கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாமல் இருந்து வந்தது.

எதிர்வரும் நத்தார், புதுவருட கொண்டாட்டங்களுக்கு முன்பாக வீதிப்புனரமைப்புகள் முடிவடையுமென தெரிவிக்கப்படுகிறது. (206)

# ஒளி விழா

யாழ்ப்பாணம்

சில்லாலை கதிரை மாதா முன்பள்ளியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு யூட் நிக்ஷன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

# கடும் மழையால் இடைத்தங்கல் முகாம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்

பருத்தித்துறை தும்பளை கிழக்கு, வெளிச்சவீடு ஆகிய இடங்களிலுள்ள இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்கள் கடும் மழையால் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஜே-403, ஜே-405 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் உள்ளனர்.

மழைநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளமையாலும், வீதிகளில் நீர் தேங்கியுள்ளதாலுமே மக்கள் இடம்பெயர்ந்தனர்.

பருத்தித்துறை நகரசபையால் வழங்கப்பட்டுவந்த பவுசர் மூலமான குடிநீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

தும்பளை கிழக்கு உதய சூரியன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க ஜே-405 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட 139 குடும்பங்கள் உள்ள இடைத்தங்கல் முகாமில் 32 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த முகாமுக்கு அருகில் மணல் அகன்ற பாரிய குழி நீண்டகாலமாக இருப்பதுடன், இக்குழியில் தேங்கியுள்ள மழைநீரே குடியிருப்புக்களுக்குள் புகுந்ததாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேற்படி குழியை மூடுவதற்காக பருத்தித்துறை நகர சபையால் கழிவுகள் கொட்டப்பட்டு குழி மூடுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றபோதும் அவை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

மழைவெள்ளத்துடன் கழிவுப்பொருட்களும் மிதந்து தம் குடியிருப்புகளில் தேங்கி வருவதால், தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



குருநகர் ஆவேமரியா முன்பள்ளி சிறார்களின் ஒளிவிழா கொண்டாட்டத்தின் போது வரவேற்பு இசை பாடும் சிறுவர், சிறுமிகளைப் படத்தில் காணலாம். (படம் 206)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## அகவை மூன்று



பெயர் : கு.கோமிகா
முகவரி : இராமநாதபுரம்

## அகவை எட்டு



பெயர் : ப.லோகிஷா
முகவரி : ஊர்காவற்துறை.

## அகவை எட்டு



பெயர் : ப.லோகிதா
முகவரி : ஊர்காவற்துறை.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ----------

முகவரி ----------

பிறந்த ஆண்டு : ----------

கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்



# யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் உயிரை பாதுகாப்பதில் பொன்சேகா தயாராகவுள்ளாராம்!



கொழும்பு—

இராணுவத்தின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு எச்சரிக்கை விடுக்கவே யாழ்ப்பாணத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'திவயின' சிங்கள நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா யுத்த களத்தில் அனுபவம் கொண்ட போராட்டத்திறன் மிக்கவர். 20 வருட போராட்டத்தில் தனது திறமை மற்றும் போராட்டக் குணத்தை செயல் ரீதியாக அவர் வெளிப்படுத்தியவர்.

லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற நாளில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்திற்கு எதிராகத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தினார்கள்.

கடந்த 4 ஆம் திகதி யாழ். கோண்டாவில் பகுதியில் படையினர் மீது நடத்தப்பட் கிளைமோர் தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டனர். அடுத்து கடந்த 6ஆம் திகதி இராணுவத் தளபதி கொழும்பில் சர்வ மதத் தலைவர்களின் ஆசீர்வாதங்களுடன் பதவியேற்ற அதேநேரம் அதாவது காலை 10.10 மணியளவில் யாழ். இருபாலையில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டனர்.

புதிய இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டபோதும், அவர் பதவியேற்றபோதும் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த இரு தாக்குதல்களையும் நேரடியாக இராணுவத் தளபதிக்கான எதிர்ப்பாகவும், அவருக்கு எச்சரிக்கை விடுக்கும் சந்தர்ப்பமாகவும் கொள்ள முடியும்.

அவர் தங்களுக்கு பெரும் சவாலாக இருப்பார் என்பது விடுதலைப் புலிகளுக்குத் தெரியும். அத்துடன் அவர் தங்களுக்கொரு அச்சுறுத்தலாகவும் இருப்பார் என்பதையும் அவர்கள் அறிவர்.

லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றதில் விடுதலைப் புலிகள் மட்டும் அச்சம் கொள்ளவில்லை. இராணுவத்திலிருக்கும் சிலரும் அச்சத்துடனே உள்ளனர். அது வேலை செய்யத் தெரியாத பல வீனமானவர்களும், ஊழல் மிக்கவர்களுமே. புதிய தளபதியிடமிருந்து தங்களால் தப்ப முடியாதென அவர்களுக்குத் தெரியும்.

களவாளிகளுக்கும், பொய்யானவர்களுக்கும் எவ்வித மன்னிப்பையும் வழங்காத லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா- தகுதியானவர்களுக்கும், திறமையானவர்களுக்கும் உரிய இடத்தை வழங்குபவர் எனப் பெயர் பெற்றவர்.

யுத்தத்தில் அடைந்த அனைத்துத் தோல்விகளிலும் தலைமைத்துவத்தின் பலவீனம் காரணமாக இருந்ததைப்போல, அனைத்து வெற்றிகளின்போதும் தலைமைத்துவத்தின் திறமை காரணமாக இருந்துள்ளது என நம்பும் புதிய தளபதி பொறுப்பேற்றதன் பின்னர் இராணுவத்தின் சில உயரதிகாரிகளை மாற்றிவிட்டு அதற்கு வேறு அதிகாரிகளை நியமித்துள்ளார்.

முக்கிய பொறுப்புகளுக்குத் திறமையான தகுந்த அதிகாரிகளை நியமிப்பது அவரின் நோக்கமாகும். அதனால் விரைவில் பல மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

புதிய இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை போராடும் இராணுவத் தளபதியாக அடையாளப்படுத்தும் விடுதலைப் புலிகள், அவரைக் கொண்டு யுத்தப் பிரகடனம் செய்விப்பதற்கு முயற்சிப்பதனை கடந்த காலச் செயற்பாடுகளிலிருந்து அறியலாம்.

எனினும், விடுதலைப் புலிகளுக்கு யுத்தபலம் இல்லையென இராணுவத் தளபதி நேரடியாகக் கூறுகிறார்.

மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டாலும், இல்லாவிட்டாலும் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றதும் அவர் முதலில் செய்ய வேண்டி ஏற்பட்டது, நடவடிக்கை நிலையத்திற்குச் சென்று யாழில் தாக்குதல்கள் சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலிருக்கும் இராணுவ அதிகாரிகளுக்குத்தேவையான ஆலோசனைகளை வழங்கியதாகும்.

விடுதலைப் புலிகளுக்கு சவாலாக இருப்பதுதான் எனக்குத் தேவையானது. நான் பலவீனமானவனல்ல என்பதை அவர்கள் அறிவார்கள். எந்தவொரு காரணத்தாலும் நான் பின்னிற்பவன் அல்ல என்பதையும் அவர்கள் அறிவார்கள் என்று லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

அவர் பலவந்தமாக யுத்தத்திற்குச்செல்வதற்குத் தயாரில்லை. தற்போதைய நிலையில் சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு அவர் தயார். எனினும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகப் பாதுகாப்புப் படையினர் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்தி இராணுவத்தினரின் உயிரைப் பாதுகாக்க இராணுவத் தளபதி தயாராகவுள்ளார். படையினரின் சுய பாதுகாப்புக்கான செயற்பாடுகளை இராணுவத் தளபதி விரைவில் எடுப்பார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி - மங்கள மோதல் தொடர்கிறது





கொழும்பு —

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும், வெளிவிவகார மற்றும் துறைமுகம், கப்பல்துறை அமைச்சருமான மங்கள சமரவீரவுக்கும் இடையேயான மோதல் நீடிக்கிறது.

துறைமுக அதிகார சபையின் தலைவர் திலீப விஜயசுந்தரவை நீக்க மங்கள சமரவீர உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவை இடைநிறுத்தம்செய்த மகிந்த ராஜபக்ச அனைத்து அரச நிறுவனங்களினது தலைவர்கள் நியமன உத்தரவும் தம்மைக் கலந்தாலோசித்த பின்னரே நியமிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தல் விடுத்தார்.

மேலும் துறைமுக சபைத் தலைவராக அதன் நிர்வாக இயக்குநர் ஆர்.எம்.பி.பி. விக்கிரமவை நியமிக்கவும் மகிந்த ராஜபக்ச திட்டமிட்டிருந்தார்.

மகிந்தவின் இந்தத் திட்டத்தை முறியடிக்கும் வகையில் நீக்கப்பட்ட திலீப விஜயசுந்தரவையே மீண்டும் துறைமுக அதிகாரசபைத் தலைவராக வெளிவிவகாரம் மற்றும் துறைமுக, கப்பல்துறை அமைச்சர் மங்கள சமரவீர நியமித்துள்ளார்.

# சந்திரிகாவுக்கு அதிக சலுகைகள்: குறைக்க மகிந்த ராஜபக்ச முயற்சி!



கொழும்பு—

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அளிக்கப்பட்டிருந்த வாகனங்களைப் பறிமுதல் செய்ய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மேற்கொண்ட முயற்சியில் இருவருக்கும் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிச் சென்றுள்ள சந்திரிகாவுக்கு 260 ஊழியர்கள், 32 வாகனங்கள், 4 குண்டு துளைக்காத வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது அவரது செயலாளர், கூடுதல் செயலாளர் ஆகியோருக்கு 2 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறி ஹொரகொலவிலுள்ள சந்திரிகா குமாரதுங்க- ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாஷியைச் சந்திக்க நேற்று முன்தினம் கொழும்பு வந்தார்.

கொழும்பு வந்த சந்திரிகாவிடம் அரசாங்கத்தின் இரு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படவுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த அவர், மஹிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்கவைத் தொலைபேசியில் அழைத்து மிகக் கடுமையாகப் பேசியுள்ளார். பின்னர் மகிந்த ராஜபக்ஷவையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது விடயமாகப் பேசியுள்ளார். கடைசியில் சந்திரிகா அலுவலகத்தில் அந்த இரு வாகனங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சந்திரிகாவுக்கும் - மகிந்தவுக்கும் இடையேயான முறுகல் நீடித்து வருவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அந்தக் கட்சியினர் கவலை தெரிவித்தனர்.

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக டலஸ் அழகப் பெரும நியமனம்!

கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது நெருங்கிய சகாவான டலஸ் அழகப் பெருமவுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்க முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகப் பெரும்பாடுபட்ட டலஸ் அழகப்பெரும தென் மாகாண முதலமைச்சராக இருந்தவர். இவரை லக்ஷ்மன் கதிர்காமருக்குப் பதிலாக நியமனப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருக்கிறார்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாதான் இந்தப் பதவியில் அமர முயற்சித்ததால் டலஸ் அழகப்பெருவின் நியமனத்தில் இழுபறி நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் கதிர்காமரது மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவரை நியமிக்க மகிந்த ராஜபக்ஷ முயற்சித்தார்.

ஆனால், இப்போது டலஸ் அழகப் பெருமவை நாடாளுமன்ற உறுப்பினராகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்க மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

மிகவிரைவில் இவர் இரண்டு பதவிகளையும் பொறுப்பேற்பார் எனத் தெரியவருகிறது. இதே வேளை, தற்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கிராம அலுவலர்களுக்கு வீடுகளும் சமாதான நீதிவான் பதவியும் வழங்க அரசு முடிவு

கொழும்பு —

வடக்கு - கிழக்கு உட்பட சகல கிராம அலுவலர்களுக்கும் உத்தியோகபூர்வ வீடுகளை வழங்கவும், அவர்களுக்குச் சமாதான நீதிவான் பதவி வழங்கி அவர்களின் சேவையைக் கௌரவிக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

பொது நிர்வாக அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கிராம அலுவலர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர சுதந்திர முன்னணி அரசாங்கம் அரச சேவைகள் மீது அதீத நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்தவகையில் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய பொறுப்பாளர்களை கிராம அலுவலர்களாக நியமித்து அவர்கள் மூலம் கிராமிய அபிவிருத்தியை உரிய முறையில் முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எப்போதும் அரசாங்க ஊழியர்கள் தொடர்பில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அரசாங்க சேவையை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கைகளையே மேற்கொண்டது. எமது அரசாங்கம் அரச துறையை மேம்படுத்தப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கிராம அலுவலர்களைப் பொது நிர்வாக அமைச்சுக்கு அழைத்து உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படுவதுடன், வருடாந்தம் சுமார் 200 கிராம அலுவலர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி உரிய பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும் எண்ணியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவத் தளபதியின் வங்கிக் கணக்கில் மோசடி செய்தவர் அகப்பட்டார்!

கொழும்பு—

இராணுவத் தளபதியின் பெயரிலிருக்கும் வங்கிக் கணக்கிலிருந்து போலி ஆவணங்களைப் பயன்படுத்தி 29 லட்ச ரூபா பணத்தை மோசடி செய்ததாக இராணுவத்தின் சிவில் லிகிதரான சமன் குமார தஸ்நாயக்க என்பவர் கைதுசெய்யப்பட்டு, எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தின் நிதி இயக்குநரால் செய்யப்பட்ட முறைப் பாட்டையடுத்து, விசாரணைகளை நடத்திய கொழும்பு விசேட மோசடி விசாரணைப் பிரிவு சந்தேக நபரைக் கைதுசெய்தது.

இராணுவத் தலைமையகத்தின் நிதிப்பிரிவில் லிகிதராகப் பணியாற்றிய சமன் குமார தஸநாயக்க, இராணுவத் தளபதியின் பெயருக்குக் கிடைக்கும் பணத்தை வங்கியில் வைப்பீடு செய்யும் கடமைக்குப் பொறுப்பாக இருந்தார்.

நிதி வைப்பீடு செய்துள்ளதாக அவர் சமர்ப்பித்திருந்த ஆவணங்கள் கணக்காய்வின் போது போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

"ஏழமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.
*- தமிழீழத் தேசியத் தலைவர்.*

# நமது நோக்கு

## சொல்ல வேண்டியதை சொல்லியாயிற்று...!

போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடு முற்றாகச் செயலிழந்துபோகும் ஆபத்தான சூழல் - புதிய ஜனாதிபதியும், புதிய அரசும் பதவியேற்றுள்ளதையடுத்து, தீவிரமடையத் தொடங்கியுள்ள நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் சொல்லவேண்டிய செய்தியை, சொல்லவேண்டியவர்களூடாக, சொல்ல வேண்டியவர்களுக்கு சொல்லியனுப்பியுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

அதாவது - புதிய ஜனாதிபதியினதும், புதிய அரசினதும் சமாதான முயற்சிகள், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறைகள் மற்றும் தமிழர் அபிலாஷைகள் தொடர்பான கொள்கைகள் யாவும், நிரந்தர அமைதியொன்று இந்த நாட்டில் ஏற்படுவதற்கான சகல பாதைகளையும் அடைத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகள் மீண்டும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கும் அரச தரப்பின் உள்நோக்கத்தையே தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

புதிய அரசு சமாதானம் குறித்துப் பேசினாலும், அதன் குரலில் தொனிக்கும் பேரினவாதக் குணாம்சமானது, அரசின் புதிய தந்திரோபாய நகர்வுகள் தமிழர்களை மேலும் பொறிவலைக்குள் தள்ளி ஏமாற்றும் அதன் பாரம்பரிய செயற்திட்டங்களை நினைவூட்டுவதுடன், அதுகுறித்து தமிழ் மக்களை விழிப்புடன் இருக்க எச்சரிப்பதாகவும் உள்ளது.

இந்த நிலையில் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்றுமுன்தினம் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக கலந்துரையாடியபோது, விடுதலைப் புலிகள் தரப்பின் நிலைப்பாட்டை மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் தெரிவித்துள்ளமையானது இன்றைய அச்சமூட்டும் சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

போர் நிறுத்த உடன்பாட்டிற்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையை விபரித்த அரசியற்துறைப் பொறுப்பாளர், அதனை முறைப்படி முழுமையாக அமுல்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதுடன் - நான்கு வருடங்களின் முன்னர் ஐக்கிய தேசிய முன்னணியின் ரணில் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும், நோர்வே அரசின் அனுசரணை மற்றும் கண்காணிப்புடனும் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு - மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டினை மாற்றுவதோ, மீளாய்வு செய்வதோ எந்த வகையிலும் சாத்தியமில்லை என்ற செய்தியையும் நோர்வே தூதுவரின் தலைமையிலான குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்ட இந்தச் செய்தி குறித்த புதிய ஜனாதிபதியினதும், அவரை நெறிப்படுத்தி நிற்கும் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற பேரினவாதிகளதும் கருத்து நிலைப்பாடு அவர்களின் கொள்கைகளுக்கு சார்பானதாக இருக்குமேயானால் அதுவே இன்றைய சமாதான சூழலுக்கு வைக்கப்படும் முற்றுப்புள்ளியாக அமையக்கூடும்.

விடுதலைப் புலிகளோ, தமிழ் மக்களோ - சர்வதேச சமூகத்தின் சமாதான முன்னெடுப்பு ஆதரவு முயற்சிகளையோ, நோர்வேயின் அனுசரணைப் பணியையோ சந்தேகித்ததுமில்லை, நிராகரித்ததுமில்லை. அது தொடர்பாக அவர்களுடன் ஒத்துழைப்பு நல்கவோ, பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவோ மறுத்ததுமில்லை.


இந்த ஆரோக்கியமான - நம்பிக்கையூட்டும் சர்வதேசம் மீதான அபிப்பிராயத்தின் அடித்தளத்தில் தான் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்தானதே தவிர, சிங்கள ஆட்சியாளர் மீதான நம்பிக்கையாலல்ல என்பதை விளக்கவேண்டிய அவசியமே இல்லை. அதனால் தான் இந்த உடன்பாடு - அதிலுள்ள அம்சங்கள் எதனையும் ஒப்புக்கொண்ட பிரகாரம் சிங்கள ஆட்சியாளர் நிறைவேற்றாது ஏமாற்றிவந்தபோதிலும்கூட - இதுநாள் வரை தொடர்ந்து அமுலில் இருந்து வருகின்றதெனலாம்.

ஆனால், இந்த நிலைமையானது இனியும் தொடரும் என்ற நம்பிக்கையானது புதிய அரசினதும், புதிய ஜனாதிபதியினதும் கொள்கைகளையும் நிலைப்பாடுகளையும் நோக்கும்போது சாத்தியமற்றதாகவே தெரிகிறது.

எனினும், இன்னும் தமது முயற்சியில் தளராமல் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் சமாதான முன்னெடுப்பைத் தொடர்முனையும் நோர்வே அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் ஒத்துழைப்பினை வழங்கத் தயாராக உள்ள விடுதலைப் புலிகள், தமது நிலைப்பாட்டினைச் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லிவிட்டார்கள். இனி அதனை அவர்கள் யாருக்கு கூறவேண்டுமோ அவர்களிடம் கூறட்டும். சமாதான சதுரங்கத்தில் அடுத்த காயை நகர்த்தவேண்டியவர் ஜனாதிபதியே...!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

நாடும் நடப்பும்




செய்தி:-
முப்படைகளும் போருக்குத் தயாராக உள்ளதாக அரச படைத் தளபதிகள் அறிவிப்பு...

# புதிய அரசின் சிந்தனைப் போக்கும்; 'மக்கள் படை' சொல்லும் செய்தியும்

தற்போது தமிழர் தாயகத்தில் நிகழ்கின்றவற்றைப் பார்க்கின்றபோது, போர் தீவிரமடைந்துவிடுமோ? என்ற எண்ணமொன்று வருவதைத் தடுக்கமுடியவில்லை. எனினும், போர் தீவிரமடைவதற்கு இன்னும் சமாதான காலத்திற்கு புலிகள் முற்றுப்புள்ளி வைக்கவில்லை.

இதனைப் புரிந்துகொண்டு புதிய ஜனாதிபதி என்ன செய்யப்போகின்றார். மஹிந்த வந்தால் போர்தான் வேறொன்றுமில்லை என்ற கூற்றினை சரியாக்கி விடுவது போல மஹிந்த செயற்படுகின்றார் எனக் கூறக்கூடிய வகையில் இந்தியாவின் சிந்தனைக்குள் மஹிந்தவின் சிந்தனை புதைபடுவதாகத் தெரிகின்ற போதும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன் காட்டுக்கத்தல் கத்திய ஜே.வி.பி. அந்தக் கத்தலில் முக்கியமான ஒரு விடயத்தை மெதுவாக கழற்றியெடுத்துவிட்டது. அதென்னவெனில் நோர்வேயை விலக்கி வைப்பதென்பதை விலக்கிவிட்டதென்பதாகும். இதன் மூலம் சொல்லப்படும் செய்தி என்னவென்றால், தொடர்ந்தும் போர்நிறுத்தம், சமாதானம் என்பவற்றைப் பெயரளவில் தக்கவைத்துக் கொண்டு புலிகளைப் போரை தொடங்கத் தூண்டுவது அல்லது விடுதலைப் போராட்டத்தைக் குன்றிவிடச் செய்வதென்பதை மிக முக்கிய வேலைத்திட்டமாக செயற்படுத்துவதில் பேரினவாத சிந்தனை கொண்டவர்களில் ஒருவரை ஒருவர் சளைத்தவர்களல்ல என்பதற்கமைவாக செயற்படுகின்றனர். பேரினவாதிகள் அரசியல் ரீதியாக எதிர்கட்சிகளாக செயற்பட்டுவந்த போதும், தமிழரின் போராட்டத்தை அழித்துவிட வேண்டும் என்பதிலும், தமிழரை அடி மாடுகளாகவே தொடர்ந்தும் வைத்திருப்பதிலும் ஒன்றுபட்டு விடுவார்கள்.

சிறிலங்கா அரசு என்ற ரீதியில் சர்வதேசமும் மனிதாபிமானம் என்பதை உதறிவிட்டு அரசுக்கு அரசு என்ற ரீதியில் துணைபோவதை இதுவரையில் குறைக்கவில்லை. அடுத்து தமிழர் போராட்டத்தில் இருந்து உதிர்ந்தவர்கள் தமது மிகமுக்கிய கடமையாக சிறிலங்கா அரசோடு நிற்கின்றனர்.

இவற்றோடு அதிகம் படித்தவர்கள் என்று தம்மைத் தாமே கூறித்திரியும் சில வறட்டுக் கருத்தாளர்கள். போரை நிறுத்தி பேச வெளிக்கிட்ட பின்னர் கைக்குண்டும், கிளைமோரும் என ஏன் மீண்டும் வேதாளம் முருங்கையில் ஏறியதுபோல செயற்படவேண்டும் என கேட்கின்றனர்.

இப்படியே இருக்க பேசலாம்தானே என்றும் கேள்வியெழுப்பும் அவர்கள், உலகத்திலேயே மோசமான சுயநலப்போக்குடையவர் அல்லது முட்டாள்தனமான கருத்துடையவர்கள் எனச் சொல்லலாம். மேற்குறிப்பிட்ட சில விடய[illegible]ர் தமிழரின் போராட்டத்தை நசுக்கி விடுவதற்கான ஒருமித்த செயற்பாடாகவே அமைகின்றன.

இதனை வெற்றிகொள்வதற்கு சர்வதேச சமூகத்தையும், தமிழ் மக்களையும் குழப்பிவிடாதவாறு போராட்ட வடிவத்தின் புதிய வடிவங்களை மக்களோடு நின்று பலப்படுத்த புலிகள் உறுதியான வேலைகளை முன்னெடுக்க வேண்டும். அதுவரையில் எவ்வளவிற்கு இயலுமோ அந்தளவிற்கு புலிகள் மக்களோடு நின்று பணியாற்றி வருவதனாலேயே போராட்டம் வெற்றியை நோக்கியே நகர்ந்து வருகிறது.

போராட்டத்தை ஒடுக்குவதற்குப் பேரினவாதிகளுடன் கூட்டு சேர்கின்றவர்கள் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து கழன்றுவிடுவதோடு, அவர்களின் பெயரை உச்சரிப்பதனையே தமிழர்கள் அருவருப்பாகக் கொள்கின்றனர். காரணம் இவ்வளவு நாட்கள் தொடரும் போராட்டத்தின் முடிவில் நல்லதொரு தீர்வு கிட்ட வேண்டும், மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு ஒரு விடிவு கிடைக்கவேண்டும்.

போராளிகளும், பொதுமக்களுமாக சுமார் ஒரு லட்சம் உயிர்களை விலையாகக் கொடுத்தும், பல்லாயிரக்கணக்கானவர்கள் அவயவங்களை இழந்தும், பெறுமதி மதிப்பிட முடியாத சொத்துக்களை இழந்தும், இடம்பெயர்வு, கைது, சித்திரவதை எனப் பல துன்பங்களைச் சுமந்ததும் சமாதானம் பேசிக்கொண்டு சாவதற்கா?

இப்படியே இருந்து விடட்டும் என கூறுகின்றவர்கள் 17,903 மாவீரர்களுக்கும் என்ன சொல்லலாமென சொல்லுவார்களா? நான்காண்டுகளாகப் பேசி எதனையும் தரமுற்படாத குழப்பவாதங்களை நிறையவே கொண்டுள்ள சிங்களப் பேரினவாதிகளிடம் இன்னும் எதைப் பேசுவது? சரி இன்னும் பேசுவோமென்று வைத்துக்கொள்வோமே.... அதற்கு நாம் எமது பலத்தை மேலும் அதிகரித்துக் கொள்ளவேண்டும் என்பதில் புலிகள் அக்கறையாக செயற்படுகின்றனர். இதற்கு மக்களும் எதிர்பார்ப்பிற்கு அதிகமாக ஆதரவு கொடுக்கின்றனர்.

உலக விடுதலைப் போராட்டங்களில் ஆயுதமேந்திய போராளிகளோடு தமது அன்றாடப் பணிகளை செய்து கொண்டு மக்கள் போர்ப் பயிற்சியெடுத்து ஆயுதமேந்தியதால் விடுதலையை விரைவாக்கினர். இதேபோன்றதொரு நிலைப்பாட்டை புலிகளும் செய்து கொண்டுள்ளனர். மக்களிடம் புலிகள் அணுகும் முறை மக்களை வெறுப்படையச் செய்யவில்லை என்பதால் ஈழவிடுதலைப் போராட்டத்தில் மக்கள் படையென்ற ஒன்று பேரெழுச்சியுடன் தயாராகிக்கொண்டுள்ளது போலுள்ளது. புலிகளின் படைவலுச் சமநிலை ஆளணியில் அதிகரித்து கொண்டுள்ளதைத்தான் மக்கள்படை வெளிப்படுத்துகின்றது.

இந்த மாதிரியான உண்மை நிலையை ஒய்வுபெற்ற படைத்தளபதியான சாந்தகொட்டேகொட புரிந்து கொள்ளாது, பலவீனமடைந்துவிட்ட புலிகள் வாய்வீச்சில் ஈடுபடுகின்றனர் எனவும் கூறியுள்ளமை நினைவிற்கு வருகின்றது.

புலிகள் பலமிழந்தவர்களாகவுள்ளனர் என்றால், கௌரவமான சமாதானத்திற்கான போரைத்தொடங்க வேண்டியதுதானே? இதில் உண்மை என்னவென்றால்- புலிகள் பலமாகவுள்ளனர். புலிகளின் பலத்தைக் குன்றிவிடச் செய்யும் பேரினவாதிகளின் அனைத்துத் திட்டங்களையும் முறியடித்து, மேலும் வளர்ச்சியடைந்துள்ளனர். இன்னும் சமாதானம், போர்நிறுத்தமென்று புலிகளை பலமிழக்கச் செய்யும் வேலைகளை செய்யவேண்டிய சிந்தனையில் உதிர்த்த வார்த்தைதான் புலிகள் பலமிழந்து விட்டனர் என்பதாகும். உண்மையில் புலிகள் பலமில்லாமல் இருப்பார்களாயின் பேரினவாதிகள் அதனை பிரசாரப்படுத்தாமல் போரைத் தொடங்கியிருப்பார்கள்.

ஆகவே, இன்று பலமாக இருக்கும் ஈழவிடுதலைப் போராட்டத்தை நோக்கியே சமாதானம் எறியப்படுகின்றது.

இதனைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர். எனவே புலிகள் வேறு, மக்கள் வேறு எனப் பிரிக்கமுடியாத நிலையை சதிவேலைகளால் முறியடிக்க முடியாது.

மக்கள் போராட்டம் விடுதலை பெற்றே முற்றுப்பெறும் என்பது உறுதியென்றும், நம்பிக்கை கொண்டுள்ளனர். மக்களுக்கு உரிமையைக் கொடுக்காது தீர்வில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசிற்கேயுள்ளது.

இப்போதுள்ள நிலைமை, எதை அரசு செய்கின்றதோ அதற்கான பதிலாகும். இது தொடர்ந்தால் போர் தீவிரமடையும். எது என்பதை அரசுதான் முடிவெடுக்க வேண்டும். மக்கள் படையாக திரழும் ஈழவிடுதலைப் போராட்டத்தலைமையின் பலத்தைச் சந்தேகிப்பதால் பயனெதுவுமில்லை.

- கனகரவி.

# கண்மூடித்தனமான கொலைகள் தொடருமானால் தமிழீழ மக்கள் உரிமைப் போராட்டம் வெடிக்கும்

## பெண்கள் மேம்பாட்டுப் பேரவை அறிக்கை

கிளிநொச்சி —

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை இராணுவத்தினரின் அனுசரணையுடன் தமிழ் ஒட்டுக் குழுக்களால் இரு பெண்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் மேம்பாட்டுப் பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்தக் கண்டன அறிக்கையில் -

இலங்கை அரசானது - ஆண்டாண்டு காலமாக ஏதுமறியாத அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதிலும், அவர்களின் அழிவுக்குத் துணை போவதாலும் எக்காலத்திலும் சளைக்கவில்லை. அதன் வெளிப்பாடாகவே மட்டக்களப்பு வந்தாறு மூலையைச் சேர்ந்த தமிழ் சகோதரிகள் திருமதி யோகராசா கோகேஸ்வரி (வயது 24) திருமதி துரைராசா வதனி (வயது 18) ஆகிய இருவரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் துடி துடிக்கக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களின் பச்சிளம் பாலகர்கள் மூவரும் தாய்மாரை இழந்து, நிர்க்கதியாகியுள்ள துப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், திருமதி யோ.யோகேஸ்வரி அவர்களின் இரண்டு வயதுக் குழந்தையான யோ.நிஷா படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். ஏதுமறியாத இந்தப் பிஞ்சுகள் செய்த தவறுகள் என்ன?

இரு உடன்பிறப்புகளை ஒரே நேரம் கொன்றொழித்து நிம்மதிப் பெருமூச்சுவிடும் இலங்கை அரசே! உன் கையாலாகாத்தனத்தை நாம் உள்ளம் கொதித்தெழ வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றிப் பேசும் சர்வதேசமே! உன் கண்முன்னால் இந்தக் கொலைகள் நடந்தேறியுள்ளது. இவ்வறிக்கையின் மூலம் உங்கள் முன் நாங்கள் இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகளுக்குத் துணைபோகின்ற வகையில் அரசானது - மேலும் மேலும் ஆயுதங்களை வாரி வழங்கிப் பெண்களையும், சிறுவர்களையும், எம்மினத்தையும் கொன்றொழிக்கும் செயற்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும்.

தமிழீழ மக்களை வெகுண்டெழவைத்துள்ள இந்தப் பெண்களின் படுகொலைக்கான காரணத்தை ஆராய்ந்து, கொலையாளிகளை எமது சமூகத்திற்கு முன் அம்பலப்படுத்த வேண்டும்.

தாய்மாரை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் பாலகர்களின் எதிர்கால வாழ்விற்கு வழிவகை சொல்லவேண்டும்.

தமிழீழத்தில் எதுமறியாத, அப்பாவிகளின் கொலைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் யுத்தநிறுத்தம் என்கின்ற போர்வையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் முடுக்கிவிடபட்டுள்ள கொலைகளை உடன் நிறுத்த வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தினதும், தமிழ் ஒட்டுக்குழுக்களினதும் கண்மூடித்தனமான கொலைகள் தொடருமாகவிருந்தால், தமிழீழப் பெண்களினதும் மற்றும் தமிழ் மக்களதும் உரிமைப் போராட்டமானது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை நாங்கள் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## தமிழீழ சுகாதார பிரிவினரால் திடீர் சுகாதாரப் பரிசோதனை

உடையார்கட்டு —

விசுவமடு சந்தை, றெட்பானா, உடையார்கட்டு சந்தை போன்ற பகுதிகளில் அமைந்துள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவுடன் தொடர்புடைய நிலையங்களில் தமிழீழ சுகாதார சேவைகளின் விசேட சுகாதார நடவடிக்கைப் பிரிவினரும், தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரும் இணைந்து பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தப் பரிசோதனையின் போது அதிகளவான சுகாதாரக் குறைபாட்டுடன் காணப்பட்ட மூன்று உணவகங்கள், இரண்டு வெதுப்பகங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு மூடப்பட்டுள்ளன. 10 உணவகங்களுக்கு அடையாளக் குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன்- பொது சுகாதாரம், உணவுச் சுகாதாரம் தொடர்பான கருத்தூட்டல்களும் நடத்தப்பட்டது. விஸ்வமடு, உடையார்கட்டுப் பகுதி வர்த்தகங்களுக்கான சுகாதாரக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



செம்பியன்பற்று பிரதேசத்தில் சுனாமியால் உயிரிழந்த 54 பேரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி – எதிர்வரும் 26 ஆம் திகதி அன்று திறந்துவைக்கப்படவுள்ளது. படம்:- ஜெயராட்.

## ஒளிவிழா

வட்டக்கச்சி —

கிளிநொச்சி - வட்டக்கச்சி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஒளிவிழா பாடசாலை அதிபர் சி.சந்திரராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டக்கச்சி பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் றொக் கலந்து கொண்டார்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. (09)

## பூநகரி வாடியடி பிரதேசத்தில் தற்காப்பு பயிற்சி ஆரம்பம்

பூநகரி —

தற்காப்புப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு பூநகரி - வாடியடிப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றது.

பூநகரி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பொன். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசியக் கொடியை பயிற்சி ஆசிரியர் சதீஸ் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் பூநகரியிலுள்ள பொது நிறுவனங்களின் தலைவர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## இதயகீதன் முன்பள்ளியில் மாணவர்கள் கௌரவிப்பு

பூநகரி —

பூநகரி ஞானிமடம் மாவீரர் இதயகீதன் முன்பள்ளியை விட்டு வெளியேறிய மாணவருக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

பூநகரி முன்பள்ளிப் பிரதேசத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை மாவீரர் இதயகீதனின் தந்தை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி த.கனகசபை, உபஅதிபர் சி.சிங்கராசா ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

## கரையோரக் காவற்படையின் மூன்றாவது அணி பயிற்சி ஆரம்பம்

முல்லைத்தீவு —

லெப்.கேணல் திருவடி பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படையின் கரையோர காவற்படையின் மூன்றாவது பயிற்சித் தொகுதியின் ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

பயிற்சியாளர் விஜிக்குட்டி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரைக் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழக் கடற்படையின் தளபதி மங்களேஸ் ஏற்றினார். லெப்.கேணல் திருவடியின் திருவுருவப் படத்துக்கான ஈகைச் சுடரினை - கடற்படைப் பொறுப்பாளர்களின் ஒருவரான வைரமுத்து ஏற்றினார்.

தொடர்ந்து சிறப்புரைகளை தமிழீழக் கடற்படைத் தளபதி மங்களேஸ் நிகழ்த்தினார். இதில் 160 கரையோர காவற்படை வீரர்கள் பயிற்சிபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் - 11

1816: இந்தியானா, அமெரிக்காவின் பத்தொன்பதாவ்து மாநிலமாக இணைந்தது.

1844: கனெக்டிகட் என்ற இடத்தில் டொக்டர் ஹேரஸ் வெல்சின் உடைய அறிவுறுத்தலின்படி முதன் முதலாக அவருக்கே நைட்ரஸ் ஒக்சைட் என்னும் சிரிப்பு வாயுவை மயக்க மருந்தாகக் கொடுத்து, அவரது நல்ல பல்லை டொக்டர் ரிக்ஸ் வலிதெரியாமல் பிடுங்கிக் காண்பித்தார்.

1903: பிரிட்டனில் வன விலங்குகள் பாதுகாப்புச் சபை நிறுவப்பட்டது.

1917: லிதுவேனியா சுதந்திரம் அடைந்ததாக அதனது தேசிய சபை அறிவித்தது.

1930: நியூயோர்க்கில் இயங்கிவந்த மிகப் பெரியதும், நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டதுமான தனியார் வங்கியான பாங்க் ஓவ் யு.எஸ். மூடப்பட்டது.

1936: ஜப்பான் தங்க நாணய மாற்று முறையைக் கைவிட்டது.

1937: சர்வதேச சங்கத்திலிருந்து இத்தாலி விலகியது.

1941: இத்தாலியும், ஜேர்மனியும் அமெரிக்கா மீது போர்ப் பிரகடனம் செய்தன.

☆: உலகின் எப்பகுதிக்கும் அமெரிக்கப் படைகளை அனுப்ப அமெரிக்க காங்கிரஸ் அனுமதியளித்தது.

☆: ஜப்பான், பிரிட்டன் மீது போர்ப்பிரகடனம் செய்தது.

1946: ஸ்பெயின் ஐக்கிய நாடுகள் சபையில் சேர்வதற்கு, ஐக்கிய நாடுகள் சபையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

1958: 1823 இல் கனடா அருகே ப்யூரி என்னும் கப்பல் கடலில் மூழ்கியது. அந்தக் கப்பல் கடலிலிருந்து மீட்ட வெளியே கொண்டு வரப்பட்டது. அந்தக் கப்பலில் இறைச்சி அடைக்கப்பட்ட டப்பா ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, திறந்து பார்க்கப்பட்டபோது, அதனுள் இருந்த இறைச்சி சிறிதுகூட பழுதடையாது அப்படியே இருந்தது.

1961: வியட்நாம் போரில் அமெரிக்கா முதன் முதலாகத் தலையிட்டது. தென்வியட்நாமுக்கு உதவ இரு ஹெலிக்கொப்டர் படைப் பிரிவுகளை அனுப்பியது.

1967: பிரான்ஸில் டுலௌசில் நடந்த விமானக் கண்காட்சியில் முதன் முறையாக ஒலியை மிஞ்சும் வேகத்தில் செல்லும் கொன்கோர்ட் விமானம் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது.

1972: அப்பலோ-17 என்ற விண்கலத்தில் சென்ற டாக்டர் ஹாரிஸ்ஸன் ஷ்மித் என்பவர் நிலாவில் இறங்கினார். நிலவில் கால் பதித்த முதலாவது நிலயியலாளர் இவர் தான்.

☆: நிம்பஸ் - 5 என்னும் வானியல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது.

1974: ரொடிஷியாவில் உள்நாட்டுப் போர் நிறுத்தம் ஏற்பட்டது. பெரும்பான்மையின கறுப்பர்களுக்கு அரசில் இடம் கொடுப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும் உடன்படிக்கை காணப்பட்டது.

1987: உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் உபயோகப்படுத்திய அவரது சின்னமாக விளங்கிய பிரம்பு, தொப்பி என்பன லண்டனில் கிரிஸ்ட்டி ஏலக் கம்பனியால் ஏலம் விடப்பட்டது. அவை இரண்டும் 82,500 பவுண்ஸ்சுக்கு ஏலம் போனது.

1988: சர்வதேச புகழ்பெற்ற இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் டென்டுல்கர் பம்பாய் அணிக்காக முதன் முதலாக விளையாடினார். இதன்போது அவரது வயது 16. இந்தப் போட்டியில் நூறு ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்தார்.

1988: மெக்ஸிக்கோ நகரில் முன் அனுமதியில்லாமல் தெருவில் பட்டாசு வெடித்ததன் காரணமாக பெரும் தீ விபத்து ஏற்பட்டு ஐந்து கட்டடங்கள் அழிந்தன. பலர் கொல்லப்பட்டனர்.

1991: ஐரோப்பிய ஒற்றுமைக்கான மாஸ்ட்ரிக் உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்ட நாள்.

தொகுப்பு:- சந்துரு

## மனித உரிமை தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் கருத்தரங்கு

வவுனியா —

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் ஒன்றியம், வவுனியா அரங்காலய பண்பாட்டுக் குழுவால் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கு நேற்று மாலை 2.30 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் - 'மனித உரிமைகளும், அவசரகால பயங்கரவாத தடைச் சட்டமும்' என்ற தலைப்பில் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உரை நிகழ்த்தினார். 'மனித உரிமைகளும் அரசியல் தீர்வும் ஒரு சர்வதேச பார்வை' என்ற தலைப்பில் சி.சோதிலிங்கம் உரை நிகழ்த்தினார்.



# புதுடெல்கி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 245 ஓட்டங்கள்!

புதுடெல்கி

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான 2ஆவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் இந்திய அணி நேற்றைய ஆட்டநேரமுடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அத்தபத்து தலைமையிலான இலங்கை அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையே 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறுகிறது.

இதில் சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்ட் சமனிலையில் முடிந்தது. இந்த நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி நேற்று டெல்கி பெரோசா கோட்லா மைதானத்தில் தொடங்கியது.

காய்ச்சல் குணமடைந்ததால் ராவிட் களமிறங்கினார். நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.



அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் தொண்ட வலி மற்றும் காய்ச்சலால் அவதிப்பட்டுவருவதால் இந்த டெஸ்டில் அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. அவருக்குப் பதிலாக யுவராஜ் சிங்கிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு பெய்த பனிப்பொழிவு காரணமாக நேற்றைய ஆட்டம் அரை மணி நேரம் தாமதமாக 10 மணிக்குத் தொடங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக கப்டன் ராவிட்டும், காம்பீரும் களமிறங்கினார்கள்.

ஆட்டம் தொடங்கிய முதல் ஓவரிலேயே வாஸின் பந்தில் 2 ஓட்டங்களை எடுத்த நிலையில் காம்பீர் எல்.பி.டபிள்யூ ஆனார். அப்போது அணியின் ஸ்கோர் 2ஆக இருந்தது. இதையடுத்து லக்ஷ்மன் 2ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ராவிட்டுடன் இணைந்தார்.

இருவரும் நிதானமாக விளையாடி வந்தனர். இந்திய அணியின் ஸ்கோர் 56ஆக இருக்கும்போது ராவிட் 24 ஓட்டங்களில் முரளிதரனின் பந்தில் முபாரக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து சச்சின் களமிறங்கினார்.

இந்தியா முதல்நாள் மதிய உணவு இடைவேளை வரை 2 விக்கெட் இழப்புக்கு 68 (18.0) ஓட்டங்களை எடுத்திருந்தது. லக்ஷ்மன் 33 ஓட்டங்களுடனும், சச்சின் 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் வாஸ், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

உணவு இடைவேளைக்குப் பின் ஆட்டம் தொடங்கியதும் இந்திய வீரர்கள் லக்ஷ்மனும், சச்சினும் அடித்து விளையாடினர்.

லக்ஷ்மன் சிறப்பாக விளையாடி அரைச்சதமடித்தார். அவர் 69 ஓட்டங்களை எடுத்திருக்கும்போது - முரளிதரனின் பந்தில், சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது இந்திய அணியின் ஸ்கோர் 133 ஆக இருந்தது.

அடுத்து 4 ஆவது விக்கெட் ஜோடியாக டெண்டுல்கருடன் கங்குலி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி விக்கெட் இழக்காமலும் அதேசமயம் அடித்தும் விளையாடியது. பின் டெண்டுல்கர் சிறப்பாக விளையாடினார்.



75.4 ஓவரில் இந்திய அணியின் ஸ்கோர் 245 ஆக இருந்தபோது சச்சின் 100 ஓட்டங்களை எடுத்து 35 தனது ஆவது சதத்தைப் பூர்த்திசெய்தார்.


போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தால் ஆட்டம் 75.4 ஓவரில் முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

சச்சின் 100 ஓட்டங்களுடனும் கங்கூலி 39 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இலங்கை அணியின் சார்பில் முரளி 2 விக்கெட்டையும் வாஸ் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

2 ஆவது நாள் ஆட்டம் இன்று நடைபெறும்.

விளையாட்டு

# இங்கிலாந்து 42 ஓட்டங்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது!




லாகூர்

பாகிஸ்தான் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் லாகூர் மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ட்ரெஸ்கொதிக், பிறியர் ஜோடி களமிறங்கியது.

இதில் அணி 43 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ட்ரெஸ்கொதிக் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் ஸ்ரரஸ் இணைந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளையாடி



அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தவேளை, பிறியர் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


அடுத்து பீற்றர்சன் களமிறங்கினார். இவரது ஆட்டத்தில் அனல் பறந்தது. இந்த ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை விரைவாக அதிகரித்தது. எனினும், அணி 185 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 35 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த பீற்றர்சன் ஆட்டமிழந்தார்.

இதன்பின் பிளின்ரொப் இணைந்தார். இவரது ஆட்டத்திலும் அனல் பறந்தது. இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை விரைவாக அதிகரித்தவேளை, 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரரஸ் ஆட்டமிழந்தார். இதனையடுத்து கொலிங்வூட் இணைந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 327 ஓட்டங்களைக் குவித்தது. இதில் பிளின்ரொப் 72 ஓட்டங்களையும், கொலிங்வூட் 34 ஓட்டங்களையும் பெற்றநிலையில் ஆட்டமிழக்காது இருந்தனர்.

பந்துவீச்சில் நவீட் உல்-ஹசன், மொகமட் சமி, டனேஷ் கனேரியா மற்றும் சொகைப் மலிக் நால்வரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 328 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற மிகக் கடினமான இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 46.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், 42 ஓட்டங்களால்



தோல்வியைத் தழுவியது.

இவ்வணி சார்பாக சல்மான் பட் 67, யுனுஸ்கான் 60, மொகமட் யூசுப் 59, சொகைப் மலிக் 50 ஓட்டங்களை கூடுதலாகக் பெற்றனர்.

பந்துவீச்சில் பிளின்ரொப் மற்றும் பிளாங்கெற் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்மிசன், அன்டர்சன் மற்றும் கொலிங்வூட் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# கவாஸ்கரின் சாதனையை முறியடித்தார் டெண்டுல்கர்




புதுடெல்கி

புதுடெல்கி பெரோசா மைதானத்தில் இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சதமடித்ததன் மூலம் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சர்வதேச கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்துள்ளார்.

இந்திய முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கரின் 34 சதங்களைத் தாண்டி 35 சதங்களை அடித்ததன் மூலம் அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். நேற்று தனது 125ஆவது டெஸ்ட் போட்டியில் கடைசிவரை ஆட்டமிழக்காமல் சச்சின் 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

# அவுஸ்ரேலியாவுடனான இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து 2 விக்கெட்டுக்களால் வெற்றி



கிறிஸ்சேர்ச்

நியூஸிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கிறிஸ்சேர்ச் மைதானத்தில் இடம்பெற்ற 3ஆவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் போட்டியின் பரபரப்பான ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 2 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. இதனையடுத்து அவுஸ்ரேலியா துடுப்பெடுத்தாடியது. அவ்வணி சார்பாக கில்கிறிஸ்ட் மற்றும் கடிச் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

ஆனால், அணி ஓட்டமெதையும் பெறாத நிலையில் கில்கிறிஸ்ட்டும் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். இதன்பின் பொண்டிங் இணைந்தார். எனினும் அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அவுஸ்ரேலிய அணி 2ஆவது விக்கெட்டாக 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த கடிச்சை இழந்தது.

இதனையடுத்து பொண்டிங்குடன் ஹொட்ஜ் இணைந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

எனினும் அணி 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த பொண்டிங், விற்றோரியின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

இதன்பின் சைமன்ஸ் இணைந்தார். ஆனால், அவர் வந்த வேகத்திலேயே ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார். இவரின் பின் கிளார்க் இணைந்தார்.

எனினும், அணி 127 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹொட்ஜ் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து கிளார்க்குடன் ஹுசே இணைந்தார். இவர்கள் இருவரும் அதிரடியாக விளையாடி அணியின் [illegible] எண்ணிக்கையை அதிகரித்தனர். இதனால் நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் இந்த ஜோடியைப் பிரிப்பதற்கு பெரும் சிரமப்பட்டனர்

இந்த நிலையில் - அணி 259 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 7[illegible] ஓட்டங்களைப் பெற்ற கிளார்க் ஆட்டமிழந்தார். இதன்பின் ஹுசேயுடன் வைட் இணைந்தார்.

ஆனால், அணியின் ஓட்ட எண்ணிக்கை மாறாதிருக்கவே அவரும் ஓட்டமெதையும் பெறாத நிலையில் பவிலியன் திரும்பினார்.

இதனையடுத்து பிறாக்கன் இணைந்தார். 50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ஹுசே 88, பிறாக்கன் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மார்ட்டின் 3, விற்றோரி 2, மில்ஸ், மற்றும் ஸ்ரைரிஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 332 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் வின்சென்ட் மற்றும் பிளெமிங் ஜோடி களமிறங்கியது. எனினும் பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய பிளெ



மிங் ஓட்டமெதையும் பெறாமலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்து அஸ்ரில் இணைந்தார். ஆனால், அவரும் 14 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இதன்பின் மார்ஷல் வந்தார்.

எனினும், 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த வின்சென்ட் ஆட்டமிழந்தார். நியூஸிலாந்து அணி 61 ஓட்டங்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து பரிதவித்தது.

எனினும், மார்ஷலுடன் ஸ்ரைரிஸ் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இந்த நிலையில் அணி 149 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மார்ஷல் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின் மக்மிலன் இணைந்தார். எனினும், அவரும் 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து கெய்ன்ஸ் வந்தார். ஆனால், அவராலும் நிலைத்து நிற்கமுடியவில்லை. அவரும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதனையடுத்து வந்த வீரர்கள் அதிரடியாக ஆடியதால் நியூஸிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது. ஸ்ரைரிஸுடன் ஜோடி சேர்ந்த ஓரம் ஸ்கோர் 257ஆக இருந்தபோது - 42 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

எனினும், அணி மேலதிகமாக ஒரு ஓட்டத்தைப் பெற்றிருக்கையில் 101 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரைரிஸ் ஆட்டமிழந்தார். இதன்பின் மக்கலம் மற்றும் விற்றோரி இருவரும் இணைந்து அவுஸ்ரேலிய பந்துகளை துவம்சம் செய்து தமது அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்தச் சென்றனர்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 49 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றதனால், அவ்வணி 2 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது. விற்றோரி 23, மக்கலம் 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் கிளார்க் 4, லூவிஸ், பிறாக்கன், வைட் மற்றும் சைமன்ஸ் நால்வரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஏழு மீன்பிடிப் படகுகள் பனூஸ் புயலில் சிக்கின!

திருகோணமலை —

இலங்கை மீனவர்கள் 35 பேருடன் 7 மீன்பிடிப் படகுகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் திருகோணமலையை அண்டிய ஆழ்கடல் பகுதியில் பனூஸ் புயல் காற்றில் சிக்கியிருப்பதாக கால நிலை அவதான நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எச்.காரியவசம் தெரிவித்துள்ளார்.

7 படகுகளில் 2 படகுகள் காணாமற்போயுள்ளதாகவும் ஏனைய படகுகள் நேற்றுமுன்தினம் மாலை மீனவர்களுடன் இந்திய கடற்பகுதிக்கு அடித்துச்செல்லப்பட்டதாகவும் அந்த மீனவர்களும் படகுகளும் இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் மீன்பிடித்துறை அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

காணாமற்போன படகுகளை கண்டுபிடிப்பதற்காக 3 கடற்படைப் படகுகள் அனுப்பப்பட்டபோதிலும் புயல் காரணமாக கடற்படையினரால் ஆழ்கடல் பகுதிக்குச் செல்லமுடியாது போனதாக கடற்படையின் நடவடிக்கை பணிப்பாளர் கொமடோர் ஜயந்த பெரேரா தெரிவித்தார்.

இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலை ஈ.பி...

வேலாயுதம் ரகுநாதன் (வயது 38), யோசப் அப்ரஹாம் (வயது 58), ஞானப்பிரகாசம் பூலோகராஜன் (வயது 39), ஞானப்பிரகாசம் அந்தோனி பெர்னாண்டோ (வயது 31) ஆகியோரே காயமடைந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தக் குண்டுவெடிப்பால் அலுவலகக் கட்டடம் பலத்த சேதமடைந்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஞானப்பிரகாசம் பூலோகராஜன், விசேட விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

ஈ.பி.டி.பியினரின் இந்த அலுவலகம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் அலுவலகத்திற்கு அருகில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை பொலிஸார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வகட்சி...

தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

இந்த இரு கட்சிகளுடனும் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களின்போது இந்த இரு கட்சிகளும் ஜனாதிபதியின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளன என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

## சிலாபம் உடப்பில்....

தெரிவித்தார்.

சுமார் 4 மணிநேரம் நடைபெற்ற இந்தத் தேடுதல் நடவடிக்கையில் சுமார் 100 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்தத் தேடுதலின்போது 100 பேர்வரை கைதுசெய்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் 24 பேரை மாத்திரம் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையவர்களை விடுவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, பசறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் உடப்பிற்கு வந்ததற்கான காரணத்தைக் கண்டறிய முடியாது போனதாகவும், இவர்கள் விடுதலைப் புலி சந்தேக நபர்களா என்பதைக் கண்டறிவதற்காக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

## பனூஸ்...

செயலர் பிரிவில் பொம்மைவெளி, நாவாந்துறை போன்ற இடங்களிலிருந்து சுமார் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

யாழ்.நகரப் பகுதியில் முனீஸ்வரன் வீதியிலுள்ள கடைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் வியாபாரிகள் தமது பொருட்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தினர். அத்துடன் கடும் காற்றால் தற்காலிக கடைகளின் கூரைகள் தூக்கிவீசப்பட்டன.

இடி மின்னல் தாக்கத்தால் பல இலத்திரனியல் பொருட்கள் தேசமடைந்தன. பொம்மைவெளிப் பகுதியில் மின்னலின் தாக்கத்துக்குட்பட்ட இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி கடற்கரையோரப் பகுதியில் வீசிய கடும் காற்றால் 30 இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன. சுனாமி அனர்த்ததால் இடம்பெயர்ந்து தற்காலிக குடியிருப்புக்களில் தங்கியிருந்த மக்களின் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் உட்புகுந்ததால் அவர்கள் மீண்டும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேவேளை, நேற்றுக்காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரையான 12 மணி நேரத்தில் யாழ்.குடாநாட்டில் 184.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்துக்குள் 200.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதற்கமைய இந்த வருடம் யாழ்.குடாநாட்டில் பதிவாகிய மழை வீழ்ச்சியின் அளவு 1229.3 மில்லிமீற்றர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இன்றும் மப்பும் மந்தாரமுமான நிலை காணப்படுவதுடன், இடையிடையே மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மீண்டும் யுத்தம்....

இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வடக்கு - கிழக்கில் எமக்கு அரசியல் ரீதியான அதிகாரங்கள் அடுத்த ஆண்டுக்குள் வழங்கப்படாதுவிடின் எமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தவுள்ளோம். புதிய ஜனாதிபதியின் பதிலிலேயே எங்களுடைய காலவரையறை தங்கியுள்ளது.

நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், எம்மீது யுத்தம் திணிக்கப்படுமானால் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் எமது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி போராட்டத்தைத் தொடர்வோம்.

இதனை நாம் முக்கியத்துவம் மிக்க இறுதிச் சந்தர்ப்பமாகக் கருதுகிறோம். தமிழர் தாயக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தெற்கிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு குறுகியகால அவகாசத்தை வழங்கியுள்ளது. இந்தக் குறுகிய காலம் என்பது 2006 ஆம்ஆண்டின் முதல் அரையாண்டிலா அல்லது நடுப்பகுதியிலா இல்லையேல் பிற்பகுதியிலா என்பது கொழும்பின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இரு கடும் போக்காளர்களான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே தமிழர்களுக்கான தனித் தாயகத்தை மறுத்துள்ளார்.

எவரினதும் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலோ, சவாலோ, துன்புறுத்தல்களோ ஏற்படுமிடத்து அதற்கெதிராகப் போராடுவது இயற்கையானது. அதனால் நாங்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கமுடியாது. தமிழ் மக்கள் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. யுத்தமொன்று மீண்டும் ஏற்பட்டால் தம்மால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியுமென முப்படைகளின் தளபதிகள் கூறியிருந்தனர். அது கோபமூட்டச் செய்யும் ஒரு தவறாகும்.

நாங்கள் அதனை சுயதம்பட்டம் அடிக்கும் மேலாதிக்க எண்ணங்களைக் கொண்ட படையினரின் பழக்கமாகக் காண்கிறோம். இராணுவம் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் விடயங்களைக் கூறுவது அபத்தமாக உள்ளது. அது எவ்வாறான வெற்றியாக அமையும். விடுதலைப் புலிகளிடம் பல தடவை தோல்வியடைந்த போதிலும் இராணுவம் சரியான பாடத்தைப் பயின்றுகொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு சிறையின் கூரைமீதேறி பத்து கைதிகள் உண்ணாவிரதப் போர்!



மட்டக்களப்பு —

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த பல மாதங்களாக விசாரணையின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 கைதிகள் உலக மனித உரிமை நாளாகிய நேற்று தமது விடுதலையை வலியுறுத்தி சிறைக் கூரைமேல் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

கிருஸ்ணபிள்ளை ரமேஸ்குமார் (சூரியவேந்தன் - வாழைச்சேனை), கணேசன் சுதர்சன் (பேத்தாழை), நடராசா சசிகுமார் (புவனராசா - கிரான்), கந்தசாமி கரன் (வாழைச்சேனை), முத்துலிங்கம் உதயகுமார் (கல்மடு), சரசகுமார் ஜனிஸ்டன் (வசந்தகுமார் - மாவடிவேம்பு), நல்லரட்ணம் சிவகுமார் (கல்முனை), சாமித்தம்பி சுதாகரன் (ஆரையம்பதி), சாமித்தம்பி மனோகரன் (அக்கரைப்பற்று), சின்னத்தம்பி பாலேஸ்வரன் (கன்னங்குடா) ஆகியோரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்கள் விடுதலை தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தால் தமது விடுதலையை வலியுறுத்தி உலக மனித உரிமை நாளாகிய நேற்று தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைதிகள் ஆரம்பித்தனர்.

தங்கள் விடுதலை தொடர்பாக சட்டத்துறை அதிகாரிகள் உறுதிமொழி அளிக்கவேண்டும்.

மனித உரிமைகள் இல்லம் சட்டத்தரணிகள் சாதகமான பதில்தர வேண்டும் ஆகிய கோரிக்கைகளையும் இவர்கள் முன்வைத்தனர்.

இதேவேளை, தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாள[ர்] சி.எம்.பார்த்தலட் நேற்று மாலை மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்[று] தமிழ் அரசியல் கைதிகளுக்கு அளித்[த] உறுதிமொழியையடுத்து - கைதிகளின் உண்ணாவிரதப் போராட்ட[ம்] இடைநிறுத்தப்பட்டது.

எழுத்துமூலம் இந்த உறுதிமொ[ழி] அளிக்கப்பட்டதுடன் தலைமையுட[ன்] தொடர்புகொண்டு உரிய பதி[லை] எதிர்வரும் 19 ஆம் திகதி தா[ம்] கொண்டு வருவதாக இணைப்பு[அதி]காரி அந்த உறுதி மொழியில் தெ[ரி]வித்தார்.

## ஊர்காவற்படைவீரர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

சேருநுவரவிலுள்ள தெஹிவத்தப் பகுதியில் ஊர்காவல் படைச்சிப்பாய் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஊர்காவல் படைவீரர் வீட்டில் இருந்தபோது, அங்குவந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சமாதானப் பேச்சு...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமநிலையான சாத்தியப்பட[க்] கூடிய வகையில் இந்த சமாதான யோசனையை விடுதலைப் புலிகளு[ம்] ஆராய்ந்து அதற்குரிய பதிலை முன் வைப்பார்கள் என நான் எதிர்பார்[க்] கின்றேன்.

சர்வதேச நாடுகளுடன் எ[மது] நாடும் இதற்கேற்ற வகையில் உ[...] முடியும் என்பது குறித்து கவ[ன]ம் செலுத்திவருகின்றோம்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபே[ாது] ஜப்பான் முதலில் நிவாரண உத[விக]களை இலங்கைக்கு வழங்கியத[ா]வும் அவர் தெரிவித்தார்.

## பிரபாவைச் சந்தி...

வார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## இரு தமிழர்கள்...

விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

சந்திரசேகரன் ஜீவானந்தம் (வயது 28) மற்றும் கிருஷ்ணபிள்ளை சசிக்குமார் (வயது 31) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் இவர்களது சடலங்கள் நேற்றுக் காலை வீதியில் கண்டெடுக்கப்பட்டன.

## சர்வதேச...

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவியின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து கருத்துரைகள் சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன.

சிறப்புரையை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார். தொடர்ந்து மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி கே.சிவபாலன், மன்னார் மாவட்ட மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த மரியநாயகம் குரூஸ், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், வவுனியா மாவட்ட மனித உரிமைகள் செயலகத்தைச் சேர்ந்த பெருமாள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட மனித உரிமைகள் செயலகத்தைச் சேர்ந்த பரமநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், கொட்டடி சிவன்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கனகரத்தினம் அவர்கள் 08.12.2005 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான முருகேசு சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா, சின்னம்மா, மற்றும் சண்முகம், துரைராசா (சுவிஸ்), காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற கோணேஸ்வரியின் மைத்துனரும், சிவதாஸ் (ஜேர்மனி), ஜெயதாஸ் (கனடா), ஜெயவதனி (லண்டன்), சசிவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகன்ராஜ் (சுவிஸ்), கிரிராஜ் (சுவிஸ்), லதா (ஜேர்மனி), இந்துலதா (சுவிஸ்), உதயராஜ் (சுவிஸ்), ஆகியோரின் பெரியதந்தையும், பேரின்பமணி (ஜேர்மனி), திலகரூபி (கனடா), சிவகந்தரூபன் (கனடா), வள்ளிநாயகி (சுவிஸ்), வசந்தராணி (சுவிஸ்), சுரேந்திரன் (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற குமுதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா (ஜேர்மனி), சியானுகா (ஜேர்மனி), அபிகா (ஜேர்மனி), ஸ்ரீபன் (கனடா), நவீன் (கனடா), பிரவீன் (கனடா), பஜீவன் (கனடா), அஞ்சனா (கனடா), சாம்பவி (கனடா), விதுரன் (ஜேர்மனி), விஞ்சி (ஜேர்மனி), விதுஷன் (சுவிஸ்), சிந்து (சுவிஸ்), காலஞ்சென்ற சபீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக் 12.12.2005 திங்கட்கிழமை மாலை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.95, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, ,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3701

(2135)

தகவல்:
மனைவி

## தம்பிராசா லீலாவதி



கரணவாய் கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா லீலாவதி 07.12.2005 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தம்பிராசாவின் அன்பு மனைவியும், புஸ்பராணி, புஸ்பராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இன்பவாணி (சுவிஸ்), கலைவாணி (சுவிஸ்), உஷாவாணி, சகிலாவாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வேலும்மயிலும் (சுவிஸ்), விஜயகுமா[ர்] (சுவிஸ்), திருச்செல்வம் (லண்டன்), சுரேசன் சந்திரகாந் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐஸ்வர்யா (சுவிஸ்), ஆதவன் (சுவிஸ்), பாரதி (சுவிஸ்), டிலக்சன், கஜானி, டிலக்ஷனா, கேதாறன், மதுஷன் (லண்டன்), சகிஷ்ணா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2005) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய்,
கரவெட்டி.

(2134)

தகவல்:
கந்தையா தம்பிராசா
(கணவர்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.